

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி பீஞ்சமந்தை மலை கிராமத்தில் அரியூர் மலைக்கோடி தங்ககோயில் தொண்டு நிறுவனம் சார்பில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வேலூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சீருடை வழங்கினார். இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு தங்ககோயில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சம்பத், ஒன்றிய குழு கவுன்சிலர்கள் என். பிரகாஷ் கே.சி.கணபதி, ஊராட்சி மன்றத் தலைவர் உதயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வேலூர் பகுதியில் ஏராளமாக இருக்கிற

# பீடித் தொழிலாளர்களின் ஊதியமும் ஓய்வூதியமும் உயர்த்தப்பட வேண்டும்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 31 - பீடித் தொழிலாளர்களின் நலனுக்காக போதிய நிதி ஒதுக்கீடு செய்து ஊதிய உயர்வு மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட பீடித் தொழிலாளர்களுக்கு கட்டாய ஓய்வூதியத்தை உறுதி செய்யுமாறு மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் கதிர் ஆனந்த் எம்.பி. வலியுறுத்தினார்.



அவர் பேசியது வருமாறு:-

நாட்டில் சுமார் 1 கோடி பீடி தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களில் 50 லட்சம் பேர் பெண்கள். எனது வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் ஆயிரக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் தங்கள் ஊதி யத்தையும் ஓய்வூதியத்தையும் நாடு முழுவதும் உள்ள பீடித் தொழிலாளர்கள் போல உயர்த்தக் கோருகிறார்கள்.

2017 ஆம் ஆண்டு ஜி. எஸ்.டி. நடைமுறைக்கு பிறகு பீடி சுருட்டுத் தொழிலாளர் நலச் சட்டம் 1976ன் கீழ் நிறுவப்பட்ட பீடித் தொழிலாளர் நல நிதி இல்லாமல் போனது. இந்த பீடித் தொழிலாளர் நல நிதி மூலம் பீடித் தொழிலாளர்களின் உடல்நலம் கல்வி சமூகப் பாதுகாப்பு போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டது. தற்போது இது ஜி.எஸ்.டி. காரணமாக முற்றிலும் நின்று விட்டது.

இது இப்படி இருக்க முறைசாரா துறையில் இருக்கும் பீடித் தொழிலாளர்கள் நிலக்கரி அல்லாத சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் சினிமாத் தொழிலாளர்கள் ஆகியோருக்கான கவரேஜை மதிப்பிடுவதற்கு இஷ்ரம் போர்டல் மூலம் தரவுத்தளத்தை உருவாக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. சுமார் 48 லட்சம் பீடித் தொழிலாளர்கள் இந்த இணைய தளத்தில் பதிவு செய்துள்ளனர். ஆனால் தற்போது வரை ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்யும் நிதி பீடித் தொழிலாளர் பொது நலன் மருத்துவம் மற்றும் சமூக பாதுகாப்புக்கு போதுமானதாக இல்லை மேலும் நாட்டில் உள்ள அனைத்து பீடித் தொழிலாளர்களின் உயிரையும் பாதுகாக்க முடியாத நிலை உள்ளது.

பீடித் தொழிலாளர்களுக்கான ஆதரவை வலுப்படுத்தவும் தொழிலில் நீண்டகால நிலைத்தன்மை உருவாக்க மற்றும் பின்னடைவுகளிலிருந்து மீட்டெடுக்க பட்ஜெட் ஒதுக்கீடுகள் புதுமையான நிதி வழிமுறைகள் மற்றும் பொது தனியார் கூட்டாண்மை போன்ற மாற்று வழிகளை ஒன்றிய அரசு ஆராய வேண்டும். பீடித் தொழிலாளர்களின் ஊதியத்தை அனைத்து பீடித் தொழிலாளர்களுக்கும் உயர்த்தி 60 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியம் வழங்குவதை கட்டாயமாக்க வேண்டும்.

தொடர்ந்து புகையிலை தூசியால் பீடித் தொழிலாளர்கள் கடும் அவதிப்படுகின்றனர்.

அவர்கள் தொண்டையில் எரியும் உணர்வு, இருமல் ஆஸ்துமா, மூச்சுக் குழாய் அழற்சி மாதவிடாயின் போது அதிக இரத்தப்போக்கு ஒழுங்கற்ற மற்றும் வலிமிகுந்த மாதவிடாய் சுழற்சிகள் இரத்த சோகை உடல் வலி மற்றும் தலைச்சுற்றல் ஆகியவற்றை அனுபவிக்கின்றனர். இதற்கு அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் இலவச மருத்துவம் தேவை.

எனவே நாட்டில் உள்ள பீடித் தொழிலாளர்களின் நலனுக்காக போதிய நிதி ஒதுக்கீடு ஊதிய உயர்வு மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட பீடித் தொழிலாளர்களுக்கு கட்டாய ஓய்வூதியத்தை உறுதி செய்யுமாறு வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு தி.மு.க.வின் வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் நாடாளுமன்ற மக்களவையில் ஜீரோ நேரத்தின் போது ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி பேசினார்.

இளையான்குடி ஒன்றியம் நாகமுகுந்தன் குடியில்

# கலைஞரின் வரும்முன் காப்போம் திட்ட சிறப்பு முகாம்!

## திருமதி தமிழரசி எம்.எல்.ஏ.தலைமை!

சிவகங்கை, ஜூலை 31 - சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா நாகமுகுந்தன் குடி அரசு தொடக்கப்பள்ளியில் கலைஞரின் வரும்முன் காப்போம் சிறப்பு திட்ட முகாம் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல் .ஏ. தலைமைஏற்று முகாமினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். வட்டார மருத்துவ அலுவலர் தமிழ்ச்செல்வன் வரவேற்றுப் பேசினார்

இந்த முகாமில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், இளையான்குடி பேரூராட்சி மன்றத்தலைவர் பி.ஏ.நஜ்முதின், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி தமிழ்ச்செல்வி பாலசுப்ரமணியன், வட்டார மருத்துவ அலுவலர்கள் முகமது நிஷா, சுபா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்ற கவுன்சிலர் ஜெயினுலாபுதீன், விவசாய அணி பா.காளிமுத்து தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன், ராஜகோபால், சுந்தரம் உதவி துணை வட்டார வளர்ச்சி அலுவலர் லட்சுமணன், சேதுபதி துரை, மற்றும் திரளான கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த முகாமில் சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், பொது மருத்துவம், போன்ற பரிசோதனைகள் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வி. கிருஷ்ணன்

### ஜூலை 31 (2011)



இராயபுரம் ‘ராபின்சன்’ பூங்காவில் 1949–ல் கழகம் துவக்கப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, அன்று முதல் கழகப் பணியாற்றி வந்தவர்.

இராயபுரம் பகுதியில் வட்டக் கழகச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

துறைமுகத் தொழிலாளியான இவர், தொ.மு.ச.பேரவையின் கீழ் இயங்கும் ‘துறைமுக தொழிலாளர் சங்கத்தை உருவாக்கியதோடு, தொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கு பெற்றதோடு, நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சென்னை மத்திய சிறையில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

வருங்காலத் தலைமுறைக்கான முதலீடு

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!



முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் சமூக நீதியை உள்ளடக்கியதாக உள்ளது. இத்திட்டம் குழந்தைகளின் இளம் பருவத்திலேயே சமக்கல்வி, சமஉணவு, சமஉணர்வு என்னும் சமத்துவத்தை பள்ளியிலேயே உருவாக்கி ஏற்றத்தாழ்வு அற்ற நிலையை உருவாக்குகிறது, குழந்தை பருவத்திலேயே ஆரோக்கியத்தை உருவாக்கி, மாணவப் பருவத்தை பயனுள்ளதாக்கி, மேல்நிலை மற்றும் உயர்நிலை கல்வி பயில உறுதுணையாவும், மாறுபட்ட சிந்தனை கொண்டதாகவும் உள்ளது. இந்தியாவில் கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக நல்லிணக்கத்தை உருவாக்குவதில் தமிழ்நாடு முதன்மையாக திகழும் என்பதாலே, இது இந்தியாவின் முதன்மை திட்டமாக மாறி, மக்களும் பிற மாநிலங்களும், கனடா போன்ற அயல்நாடுகளும் இந்தத் திட்டத்தை வரவேற்கத் தொடங்கியுள்ளது மிகச் சிறப்பானதாகும்.

இத்திட்டத்தினால் அரசுப் பள்ளிகளுக்கு வரும் மாணவ , மாணவியர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது, கல்விப் பயிலும் ஆர்வத்தை தந்துள்ளது, காலம் தவறாமை என்ற ஒழுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, இத்திட்டம் பள்ளி சீருடை அணியாத மாணவ மாணவியரை சீருடை அணியச் செய்து, முகம் கழுவி, தலை வாரி வரும் வகையில் சுகாதாரத்தையும் மேம்படுத்தியுள்ளது, சில நேரங்களில் மாணவ மாணவியர் பெற்றோர் பராமரிப்பு இல்லாமல் வருவார்கள். ஆனால் தற்போது பார்த்தோமேயானால் புத்தக பைகளை தோளில் சுமந்து பள்ளிக்கு வரும் போது எவ்வளவு அழகுடன் ஆர்வத்துடன், ஆனந்தமாக சிரித்த முகத்துடன் குழந்தைகள் வருகிறார்கள் என்பது நேரடியாக கள ஆய்வு செய்தால் மகிழ்ச்சிப் பொங்க வருகை தருவது தெரிய வரும்.

இத்திட்டம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 7.5.2022ல் சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்டு, இதற்கான ஆய்வுகள் மேற்கொண்டு, கட்டமைப்பை உருவாக்கி வெறும் 4 மாதத்தில் அதாவது 15.9.2022ல் முதற்கட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது,

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் உணவு தயாரிக்கும் முறை எப்படி என்பதை நீங்கள் நேரடியாக கண்டறிந்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கும், ரூபாய் 25-28 இலட்சம் செலவில் கட்டப்பட்ட அதிக காற்றுவெளி கொண்ட பிரத்தியோக சமையல் கூடம், புதியதான பாத்திரங்கள் தரமான அரிசி, தானியங்கள், எண்ணெய், காய்கறிகள் தினமும் வாங்கப்படுபவை. இதில் மிகவும் ஆச்சரியமானது என்னவென்றால் சுத்திகரிப்பு செய்யப்பட்ட தண்ணீர் சமையல் என்பது மேலும் பிள்ளைகளுக்கு காய்கறியில் சத்துக்கள் குறைந்து விடக்கூடாது என்பதற்காக தினம் தினம் காய்கறிகளை வாங்கி பயன்படுத்தப்படுகிறது, குளிர் சாதன பெட்டியே இல்லாத சமையல் கூடம் எது என்றால் அது முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட சமையல் கூடமாக மட்டுமே இருக்க முடியும். இங்கு குளிர் பதன பெட்டி வைக்க அனுமதிக்கப்படுவதில்லை, அந்த அளவிற்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான உணவு மிகவும் கவனத்தோடு தயாரிக்கப்படுகிறது.

மேலும், உணவு தயாரிப்பு என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட கைதேர்ந்த தொழில்முறை உணவு தயாரிப்பு நிறுவனங்களால், திறமை வாய்ந்த சமையல் கலைஞர்களால் உணவு தயாரிக்கப்படுகிறது, இதனால் தரமும், சத்தும், சுவையும் நிறைந்ததாக அளவோடு உணவு தயாரிக்கப்படுகிறது,

சமைக்கப்பட்ட உணவினை முறைப்படுத்தி, சூடாக இருக்க ஹாட் பாக்சில் நிரப்பி, அதனை பள்ளிகளுக்கு பிரத்தியோக வாகனத்தில் அனுப்பி வைக்கப்படுவதுடன், வாகனத்தையும் கண்காணிப்பு செய்வார்கள், வாகனம் குறிப்பிட்ட பள்ளிக்கு சென்றடையும் வரையில் வழியில் எங்கும் நிற்க கூடாது, அந்த உணவினை குறிப்பிட பள்ளிக்கு அளித்து பிரத்தியோக வலைதளத்தில் (appল்) பதிவு, உணவினை பள்ளியில் பெற்றுக் கொண்டு, குறித்த கால நேரத்தில் வந்தது என்றும், அளவு சரிபார்ப்பு செய்து உணவு முறையாக வந்து சேர்ந்தது என்பதை உறுதிப்படுத்தியும் வலைதளத்தில் (appல்) பதிவு செய்யப்பட வேண்டும்.

பின்னர் உணவு பரிமாற்றம், உணவு பரிமாற்றத்திற்கு பின் பிள்ளைகள் உணவுகளை உண்ட விவரங்களையும் வலைதளத்தில் (appல்) பதிவு செய்யப்பட வேண்டும், இவ்வாறாக உணவு தயாரிப்பு ஆரம்பித்து முடிக்கும் நேரம் வரையில் இதற்கென உருவாக்கப்பட்ட வலைதளத்தில் (appல்) பதிவேற்றம் செய்ய வேண்டும், இதில் ஏதேனும் ஒரு நிலையில் காலதாமதம் ஏற்பட்டால், உடனடியாக சம்பந்தப்பட்ட துறை ஐ.ஏ.எஸ். அலுவலர்களுக்கு தகவல் சென்றடையும், உடனே அலுவலர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இதற்கான காரணத்தைக் கேட்டு ஐந்தாறு அலுவலர்கள் மாறி மாறி விசாரிப்பார்கள். அதுவும் சாதாரண மட்டத்தில் அல்ல ஐ.ஏ.எஸ். அதிகாரி அளவில் விசாரிப்பார்கள், மேலும், மாவட்ட ஆட்சியர், மாவட்ட முதல்நிலை அலுவலர்கள் அவ்வப்போது ஆய்வு செய்வார்கள், மேலும், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளால் கண்காணிப்பு செய்யப்படுகிறது,

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் முத்தாய்ப்பாக சுவை நிறைந்த கேசரி பரிமாறப்படுகிறது, குழந்தைகள் ஆர்வத்தோடு எழுச்சி பொங்க உணவினை உண்பதினால் குழந்தைகளின் வளர்ச்சி சீராக இருப்பதுடன், சோர்வினை போக்கி, புத்துணர்ச்சி பெற்று, கவனிப்புத்திறனும் மேம்பட்டு கல்வியில் சிறந்து விளங்கி வருவதாக ஆய்வுகளில் தெரிய வருகிறது,

புரட்சிகரமான சமுதாய மாற்றமாக - ஒற்றுமையை, மத நல்லிணக்கத்தை குழந்தை பருவத்திலே ஏற்படுத்தும் புரட்சிகரமான திட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுகிறது,

மேலும், சத்துக்கள் நிறைந்த சுவையான உணவோடு, கல்வியும் வழங்கப்படுவதால் மாலையில் பள்ளியை விட்டு மாணவ, மாணவியர்கள் மிகுந்த உற்சாகத்துடன், வீடு திரும்பும் போது அவர்களின் பெற்றோர் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது, மேலும், இத்தகைய செயல்பாடுகளால் குடும்பத்தின் பொருளாதார வளர்ச்சியும் குடும்பத்தில் நிகழ்கிறது என்பதை அறிய முடிகிறது. உணவின் தரம், சுவை அளவு குறித்த புகார் பதிவேடும் பராமரிப்பு செய்யப்படுகிறது என்பதை தெரிந்து கொண்ட பொதுமக்கள் தங்கள் பிள்ளைகளை ஐயமின்றி பள்ளிக்கு அனுப்புவதில் பெருமை கொள்கிறார்கள், முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள்,

இவ்வாறான சூழ்நிலையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கல்வி அறிவுக்கு ஏங்கி இருக்கும் மாணவ, மாணவியர், பெற்றோர்களின் வரவேற்பைப் பெற்ற காரணத்தின் அடிப்படையில், கற்றலை ஊக்குவித்து கல்வி அறிவு எல்லா குழந்தைகளும் பசியின்றி பெற்றிட வேண்டும் என்ற வகையில் விரிவாக்கப்பட்ட முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை ஊரக பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்துள்ளது மிகவும் போற்றுதலுக்கு உரியது, மிகவும் சிறப்புடையது,

இந்த சிறப்பு வாய்ந்த முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் பயிலும் சுமார் 19,000,00 மாணவ, மாணவர்கள் பசியின்றி கல்வி பயிலும் இத்திட்டத்தில் பயனடைகிறார்கள்,

இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு நிதி ஒதுக்கீடு பற்றி அலுவலர்கள் பேசும்போது நிதி ஒதுக்கீடு என்று கூறாதீர்கள். வருங்கால தலைமுறையை உருவாக்குகிற முதலீடு என்று சொல்லுங்கள் என்று மாணவ, மாணவிகளையும் அவர்தம் பெற்றோர்களையும் பெருமைப்படுத்தி முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தமைக்கு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்று குறிப்பிட்டது பெருமையாகவே உள்ளது.

**வேலூர் த.சௌந்தர்**

பண்ருட்டியில் 1500 மாணவர்கள் பங்கேற்ற

# சிலம்பம் விளையாட்டுப் போட்டி!

## நகர்மன்றத் தலைவர் க.இராஜேந்திரன் துவக்கி வைத்தார்!

பண்ருட்டி, ஜூலை 31 - தமிழ்நாடு வீரத்தமிழர் தற்காப்பு சிலம்பம் விளையாட்டு கலைக்கூடப் பேரவை சார்பில்1500 மாணவர்கள் 33 நிமிடம் சிலம்பம் சுழற்றி மாபெரும் ராயல் புக் ஆப் உலக சாதனை நிகழ்ச்சி பண்ருட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

பண்ருட்டி நகர மன்ற தலைவர் , நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் கலந்து கொண்டு தலைமை தாங்கி, தற்காப்பு கலை நிகழ்ச்சியை சிலம்பம் விளையாடி துவக்கி வைத்தார்.

காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் வி.பழனி, வணிகர்சங்கங்களின் பேரவை செயலாளர் வி.வீரப்பன் ,பள்ளி தாளாளர்கிருஷ்ணமூர்த்தி, அசோக்ராஜ்ஜெயின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருவள்ளுவர் முத்தமிழ் சங்கத்தின் கௌரவத்தலைவர் முனைவர் சஞ்சீவிராயர், ஆட்சிமன்ற குழு புலவர் இரத்தின ஆறுமுகம், பெற்றோர் ஆசிரியர் சங்க துணைத்தலைவர் ஏ.வி.லோகநாதன், கே. பழனி, தேசியமாணவர் படை முனைவர் ராஜா, பள்ளி தாளாளர்கள் சேரன், கலைமோகன், மா.நடராஜன்,நகர இளைஞரணி அமைப்பாளர் ஏ.சம்பத் மற்றும் காவல் துறை ஆய்வாளர் , வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் , ரோட்டரி சங்க நிர்வாகிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள் , மாணவ செல்வங்கள் அனைவரும் கலந்து கொண்டு இந் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிலம்ப ஆசான் கலைரத்னா ஏ. எஸ்.சிகாமணி செய்திருந்தார்.



தமிழ்நாடு வீரத்தமிழர் தற்காப்பு சிலம்பம் விளையாட்டு கலைக்கூடப் பேரவை சார்பில் 1500 மாணவர்கள் 33 நிமிடம் சிலம்பம் சுழற்றி மாபெரும் ராயல் புக் ஆப் உலக சாதனை நிகழ்ச்சி பண்ருட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. பண்ருட்டி நகர மன்ற தலைவர், நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் கலந்து கொண்டு தலைமை தாங்கி, தற்காப்பு கலை நிகழ்ச்சியை சிலம்பம் விளையாடி துவக்கி வைத்தார். காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் வி.பழனி, வணிகர்சங்கங்களின் பேரவை செயலாளர் வி.வீரப்பன் , பள்ளி தாளாளர் கிருஷ்ணமூர்த்தி, அசோக்ராஜ்ஜெயின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருவள்ளுவர் முத்தமிழ் சங்கத்தின் கௌரவத்தலைவர் முனைவர் சஞ்சீவிராயர், ஆட்சிமன்ற குழு புலவர் இரத்தின ஆறுமுகம், பெற்றோர் – ஆசிரியர் சங்க துணைத்தலைவர் ஏ.வி.லோகநாதன், கே.பழனி, தேசியமாணவர் படை முனைவர் ராஜா, பள்ளி தாளாளர்கள் சேரன், கலைமோகன், மா.நடராஜன்,நகர இளைஞரணி அமைப்பாளர் ஏ.சம்பத் மற்றும் காவல் துறை ஆய்வாளர், வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் , ரோட்டரி சங்க நிர்வாகிகள் , அரசியல் கட்சி பிரமுகர்கள், மாணவ செல்வங்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிலம்ப ஆசான் கலைரத்னா ஏ.எஸ்.சிகாமணி செய்திருந்தார்.